# ஆங்கில பாட புத்தகங்கள் இறக்குமதி: கல்வியாளர்களின் முயற்சி பாராட்டத்தக்கது



பெட்டாலிங் ஜெயா, அக். 8-

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கில மொழி பாடப் புத்தகங்கள் அம்மொழியை மலேசிய மாணவர்கள் உலகளவில் பயன்படுத்தக்கூடிய திறனை வளர்க்கும். கல்வியாளர்களின் இந்த முயற்சி பாராட்டத்தக்கது என 'யூசிஎஸ்ஐ' பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் தாஜுடின் ரஸ்டி தெரிவித்தார்.

இந்த முயற்சி உண்மையில் நம் மாணவர்களை ஆங்கில மொழியில் மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்வது மட்டுமின்றி அனைத்துலகப் பதிப்பகங்களில் குறிப்பிடப்பட்டு உள்ளதைப் போல் இது கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்ளும் பரவலான பழக்கத்தை ஏற்படுத்தும். இறக்குமதி செய்யப்பட்ட புத்தகங்களைப் படிப்பதால் ஒருவரின் கலாச்சாரம், சமயம், வாழ்க்கை முறை ஆகியவற்றை விரிவுப்படுத்த முடியும். இதை அரசு ஆதரிப்பதன் முக்கிய நோக்கம் என்னவென்றால் இந்த புத்தகங்கள் அனைத்தும் பிரிட்டன் எழுத்தாளர்களால் எழுதப்பட்டவையாகும் என்று பத்திரிகையாளர்களிடம் தாஜுடின் ரஸ்டி குறிப்பிட்டார்.

இவற்றில் உள்ள உள்ளடக்கங்கள் (contents) சொல்லகராதி (vocabulary) இலக்கணம் (grammar), படங்கள் போன்றவற்றின் பயன்பாட்டை ஊக்குவிக்கின்றன. இதில் கல்வி அமைச்சின் புத்தாக்க நடவடிக்கையின் ஒரு பகுதியாக அடுத்தாண்டு தொடங்கி இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கில மொழிப் பாடப் புத்தகங்கள் பள்ளிகளில் பயன்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது.
இந்த இறக்குமதி செய்யப்பட்ட புத்தகங்களை நம் உள்ளூர் புத்தகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது கற்றல் தரத்தில் மிகவும் வித்தியாசமானதாகத்தான் அவை இருக்கின்றன.

இதில் எப்படியிருப்பினும் வாசிப்பதுதான் ஆங்கில மொழியில் புலமைப் பெறுவதற்கான ஒரே வழி என்பதால் தேர்வு எழுதும் மாணவர்களுக்காக மட்டுமின்றி பல்வேறு வகையான புத்தகங்களைப் பள்ளி நூல் நிலையங்களில் வைத்திருக்க கல்வி அமைச்சு வகை செய்ய வேண்டும் என்று தாஜுடின் ரஸ்டி மேலும் கூறினார்.